## ஸ்டெர்லைட் துப்பாக்கி சூடு சிடி வெளியிட்ட

# முகிலனை ஆஜர்படுத்தக்கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்கு

### போலீசுக்கு நோட்டீஸ்

சென்னை, பிப். 19: சென்னை உயர் நீதிமன்றத்தில் வக்கீல் ஹென்றிடிஃபேன் தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனுவில் கூறியிருப்பதாவது:

தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலையை மூட வலியுறுத்தி கடந்த 2018 மே 22ல் நடந்த போராட்டத்தின்போது பொதுமக்கள் மீது போலீசார் துப்பாக்கி சூடு நடத்தினர். இந்த சம்பவத்தில் 13 பேர் பலியாகினர். இதற்கு காரணமான போலீஸ் உயர் அதிகாரிகள் தொடர்பான வீடியோவை சுற்றுச்சூழல் ஆர்வலர் முகிலன் கடந்த 15ம் தேதி சென்னையில் வெளியிட்டார்.

அதன்பிறகு அவர் அன்று இரவு சென்னையில் இருந்து மதுரைக்கு ரயிலில் சென்றுள்ளார். ஆனால், திண்டிவனத்தை தாண்டியதுடன் அவரது செல்போன் இணைப்பு துண்டிக்கப்பட்டது. அதன் பிறகு அவரது தொடர்பு முற்றிலும் நின்றுவிட்டது. இதுதொடர்பாக போலீசில் புகார் கொடுத்தோம். நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே அவரை கண்டுபிடித்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு உத்தரவிட வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நீதிபதிகள் எம்.சத்தியநாராயணன், எம்.நிர்மல் குமார் ஆகியோர் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. மனுதாரர் சார்பில் வக்கீல்கள் ஆர்.சுதா ராமலிங்கம், வக்கீல் சி.அய்யப்பராஜ் ஆஜரானார்கள்.

அப்போது, நீதிபதிகள், அகிலன் காணாமல் போய்விட்டதாக பிப்ரவரி 17ம் தேதி புகார் கொடுத்துவிட்டு மறுநாளே நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்துள்ளீர்கள்.

மனுவில் சட்டவிரோதமாக முகிலன் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளீர்கள். போலீசார் விசாரிக்க அவகாசம் தரவேண்டும். இந்த வழக்கில் சென்னை மாநகர போலீஸ் கமிஷனர், விழுப்புரம், காஞ்சிபுரம் மாவட்ட எஸ்பிக்கள் வரும் 22ம் தேதிக்குள் பதில் மனு தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டனர்.


**CHENNAI METRO RAIL LIMITED**

(A Joint Venture of Govt. of India and Govt. of Tamil Nadu)
Admin Building, CMRL Depot, Poonamallee High Road,
Koyambedu, Chennai - 600107, INDIA

**NOTICE INVITING e-TENDER**

| | |
|---|---|
| Contract Name | Tender for Licensing of built-up bare shell Shops / Office Spaces at Selected Elevated and UG Metro Stations along Corridor I & II |